ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/28 - 2018 මාර්තු මස 28 වැනි බදදා - 2018.03.28

*2064/28 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு: MTR/LND/ACQVI/L1/3978.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 430, தல்பாவில வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளின் தல்பாவில கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் முற் பிரதிப்பட இலக்கம் மாற 2725 படத்தில் துண்டு இலக்கம் 1 எனக் காட்டப்பட்டுள்ள காணி, மாத்தறை கதிர்காம புதிய புகையிரத வீதியை அமைப்பதால் வீடுகள் அவதாணம் நிலைக்கு ஏற்படல் மற்றும் இவ்விடத்தில் நடத்தப்படும் தொழில் நுட்ப தேவை காரணமாக வீடுகளை எடுத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது.

*01.* **துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஹில்கிரஸ்ட் வத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம், மலசலகூடம் மற்றும் கிணறு; ஆரம்ப உரிமை கோருபவர்: பிரியன்தி குணவீர, "யஸ இசுரு" தல்பாவில வடக்கு கெகணதுர; விஸ்தீரணம் : 0.0479 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி மு. ப 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. டி. கே. விக்ரமஆரச்சி,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி கொள்வனவு அலுவலர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2018, மாச்சு 23.

04 - 481

1A - G 27376 - 17 (2018/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.